சுப்பசோனிக் மட்டுவிலில் குண்டுவீச்சு; பெண் பலி

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 29 இதழ் 337

யாழ்ப்பாணம் புதன்கிழமை 13 — 01 — 1993

(சாவகச்சேரி)

யாழ் குடாவில் வான் பரப்பில் நேற்றுக்காலை எட்டுமணியளவில் பேரிரைச்சலுடன் ஊடுருவி வந்த இரு சுப்பசோனிக் விமானங்கள் தென்மராட்சி மட்டுவில் வடக்கில் இருதடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதில் அதிர்ச்சியடைந்த பெண்மணி ஒருவர் பலியானார். ஆறு வீடுகள் சேதமடைந்தன.

மட்டுவில் அம்பலந்துறை வயல்வெளியை அண்டிய பகுதியான உடையார் வளவில் விழுந்து வெடித்ததினால் 15 அடி ஆழமும், 16 அடி நீளமும் உடைய இரு பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதுடன் இக்குழிகளில் நீர் ஊற்றெடுத்த வண்ணமுள்ளது.

இக்குண்டு வீச்சினால் வயல்களில் அறுவடைக்குத் தயா

(4-ம் பக்கம் பார்க்க)

நூற்றுக்கணக்கான மக்கள் தெய்வாதீனமாக தப்பினர்

சாவகச்சேரி,

மட்டுவில் அம்பலாந்துறை வயல்வெளிக்கு அருகில் சுப்பசோனிக் குண்டுவீச்சு நிகழ்ந்த போது, நூற்றுக்கணக்கான மக்கள் அங்குள்ள வயல்களில் உடனே படுத்துவிட்டனர்.

சில யார் தூரத்திற்கப்பால் இந்தக் குண்டுகள் வீழ்ந்து வெடித்தமையால், இவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுப்பசோனிக் விமானங்கள் எம்மை நோக்கிப் பேரிரைச்சலுடன் பதிந்துவரும் சத்தம் எமது காதுகளைப் பிளந்தது. விமானத்தின் இரைச்சலினால் நிலைகுலைந்திருந்த நாம் நடப்பது நடக்கட்டும் என்றவாறு

(4 ம்பக்கம் பார்க்க)

"யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா அரசிடம் வலியுறுத்துவேன்"

யாழ். மாநகரை சபை வரவேற்பில் அங்கிலிக்கன் ஆயர் உரை

(யாழ்ப்பாணம்)

"இந்த நாட்டின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல் படுத்தி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதையே பெரும்பான்மையான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள் என்பதை நான் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் வலியுறுத்திக் கூறுவேன்."

இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபை கொழும்பு ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ நேற்றுமாலை யாழ். மாநகரசபை அளித்த வரவேற்பு வைபவத்தில் கூறினார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் தன்மையில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தில் கொழும்பு ஆயர் மேலும் பேசுகையில்;

அரசு உடனடியாக பிரயாணத் தடைகளை நீக்கி தமிழ் மக்களும்-சிங்கள மக்களும் தங்கு தடையின்றி கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் பேச அரசு மூன்றாம் தரப்புடன் முயற்சி

(லண்டன்)

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் மூன்றாம் தரப்பு ஒன்றின் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது என பி. பி. சி. யின் கொழும்பு நிருபர் கியாகா நோசு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோவும் அவரது குழுவினரும் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆயருக்கு அமைச்சர் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு

அங்கிலிக்கன் கொழும்பு ஆயர் வண. கெனத் பெர்னாண்டோவும், அவரது குழுவினரும் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு, பிரதிப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் நேற்று நன்றி தெரிவித்தார்.

கிராம சேவை அலுவலர்களுக்கான சட்ட மூலம் பற்றியவிவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோது அவர் அங்கிலிக்கன் ஆயருக்கு நன்றி தெரிவித்தார் (க)

இரு தமிழர் சுட்டுக்கொலை!

(மட்டுநகர்)

மட்டு. கன்னங்குடா பகுதியில் இரு தமிழர்கள் சிறிலங்கா படையினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மண்டபத்தடி என்ற கிராமத்தில் அமைந்துள்ள இராணுவ காவல் நிலையம் அருகே மட்டு டச்பார் பகுதியிலுள்ள டட்லி சென்றி 45 வயது, சுந்தரம் விஸ்வராசா (24 வயது) ஆகியோரே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். (ம)

தபால்கள்

(யாழ்ப்பாணம்)

வெளியூர்களுக்கான தபால்களை உடனடியாகத் தபால்

(4-ம்பக்கம் பார்க்க)

கலைஞானி அறக்கட்டளை

'கலைஞானி அறக்கட்டளை' நாளைய ஈழநாடு இதழில் விபரமாக வெளிவரும்

ஆரையம்பதி பகுதியில் 12 தமிழர்கள் கைது

(மட்டுநகர்)

ஆரையம்பதிக்கு அருகிலுள்ள புதுக்குடியிருப்பு என்னுமிடத்தில் அண்மையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் சுற்றிவளைத்து நடத்திய தேடுதலின்போது 12 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் ஆரையம்பதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதேபோல் களுவாஞ்சிக்குடிப்பகுதியிலும் தேடுதல் நடத்திய படையினர் ஒருவரைக் கைது செய்து மட்டு சிறையில் அடைத்து வைத்துள்ளனர். (ரி)

மண்ணெண்ணை லொறிகள் ஆலங்கேணி வந்தன

யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பெரும் தொகையான உணவுப் பொருள்களுடன் 100க்கும் மேற்பட்ட லொறிகள், யாழ். நகருக்கு வருவதற்காக ஆலங்கேணிப் பகுதியில் நீண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய ஜனாதிபதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மா ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பில் தற்பொழுது தங்கியுள்ள இந்திய வெளியுறவு இணை

4ம் பக்கம் பார்க்க)

ஆயர் இன்று கொழும்பு பயணம்

(திருநெல்வேலி)

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் வண. கெனத் பெர்னாண்டோ இன்று மாலை கொழும்பு செல்வார் எனஎதிர் பார்க்கப்படுகிறது.

இவருடன் விடுதலைப்புலிகளினால் விடுவிக்கப்பட்ட பொலிஸாரும் பயணம்செய்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (157)

யாழ். மக்களின் கஷ்டங்கள் உச்சநிலையை அடைந்துவிட்டன

ஐ. நா. செயலருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் அனுபவித்து வரும் துயரங்கள் தற்போது உச்ச நிலையை அடைந்துவிட்டன. இதனை மனித சமுதாயம் வெறுமனே கை கட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது மனிதத் தன்மையற்ற ஒரு செயலாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியானார்கள்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடல் பகுதியில் அண்மையில் கடற்படையினர் பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் யாழ் நகரைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் மூவர் பலியாகியுள்ளதாக, தற்போது தெரியவந்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

மேலும் மூன்று சடலங்கள் கரை ஒதுங்கின

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான மூன்று ஆண்களின் சடலங்கள், கடந்த திங்கட்கிழமை ஆலங்கேணிப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளன.

மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இச்சடலங்கள், பொதுமக்களால் ஆலங்

(4-ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 10 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தங்களினால் 5 வயதுக்குட்பட்ட பெருமளவு குழந்தைகளே போதிய போஷாக்கு இன்றி நலிவடைந்துள்ளதாக ஐக்கியநாடுகள் சபையின் குழந்தைகளுக்கான நிதி நிறுவனம் (யூனிசெப்) நேற்று வெளியிட்ட அதன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 1983-ம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் வடக்கு கிழக்கு யுத்தம் 1988, 1989-ம் காலப்பகுதியில் தென்பகுதியில் இடம்பெற்ற கிளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக இலங்கையின் பெரும்பாலான சிறுவர்களும், தாய்மாரும் போஷாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ)

வரி விளம்பரம்

நோவு வைத்தியம்

ஓட்டகபுலம் சமித்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7052)

வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக் கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2785)

சிவாஸ் ஸ்ரூடியோ இடமாற்றம்

பண்டத்தரிப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ரூடியோ தற் பொழுது சித்தங்கேணியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. சிறந்த முறையில் வீடியோ, கலர் அறுப்பு வெள் ளோப் புகைப்படங்கள் மதிரும் தேசிய அடையாள அட்டைப் படங்கள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறு கிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். "சிவாஸ் ஸ்ரூடியோ, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை. (சி-7106)

PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற் படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி மெடிக்கல்ஸ், ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7065)

29 - 1 - 93 வியாழன் வக்கிரம் ஆரம்பம்

புத்தாண்டுப் பலன்களும் வியாழன், செவ்வாய் வக்கிரங் களும் ரூ. 8/-பொங்கல் முதல் எங்கும் விற்பனை யாகின்றன. மக்மிலன், கிருஷ்ணசாமி புத் தகசாலைகள் - யாழ்ப்பாணம். (நூலாசிரியர் – Prof. சத்திய தாஸன். (சி-7138)

இலவச வைத்தியசாலை

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின்கீழ் மற்றுமொரு இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை சண்டிலிப்பாயில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற் கான அனுமதி கோரம் வடக்கு மாகாண சபையின் சுகாதார மாற்றுமருத்துவப் பிரிவினால் வழங்கப்பட்டுவிட் டது. (92)

இன்று

(தொழும்புத் துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசேட கூட் டம் பிரிவுத்தலைவர் திரு. எஸ். ஸ்ரனிஸ் தலைமையில் பிரிவு பணிமனையில் இன்று 13-ந் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடை பெறும். (154)

பயறு, சர்க்கரை தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

தைப்பொங்கலுக்கு தேவைப் படும் சர்க்கரை, பயறு என்ப வற்றின் விலைகள் மிகவும் அதி கரித்துவிட்டதுடன் இவற்றுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுவிட்டது. இக் கடைகளில் ஒரு கிலோ பயறு 75 ரூபா தொடக்கம் 80 ரூபாவரை விற்கப்பட்டு வருகின்றது. சர்க்கரை கிலோ 160 ரூபாவாக விற்கப்படு கிறது. (72)

மருந்துத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

நல்லூரில் இயங்கிவரும் இடம் பெயர்ந்தோருக்கான அரசாங்க மத்திய மருந்தகத் தில் பனடோல் குளிசை உட் பட மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின் றது. தினமும் 250க்கு மேற் பட்ட நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறுவதற்கு வரு கின்றனர். மருந்துத் தட்டுப் பாட்டினால் இடம்பெயர்ந்து துன்பத்தில் வாழும் ஏழை நோயாளர்கள் பெரிதும்பாதிக் கப்பட்டுள்ளனர். (62)

புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக திருத்த வேலைகள் எதுவும் மேற் கொள்ளப்படாதிருந்த மூத தையன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் கடந்த அக்டோபர் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் ஆரம்பிக்கப் பட்டது.

இந்த புனரமைப்பு வேலை யின் முதற்கட்டமாக குளத் தின் மோசமாகப் பாதிக்கப் பட்டிருந்த அணைகள் திருத் தப்பட்டுள்ளன.

இராசி பலன்

13 01 1993
புதன்கிழமை
(தமிழுக்கு மார்கழி 29)

பஞ்சமி காலை 8-21 வரை: உத்திரம் பி. இ. 8-34 வரை, அமிர்தசித்தயோகம். இராகு காலம் நண்பகல் 15-33 முதல் 2-03 வரை, சுபநேரம் மாலை 5-03 முதல் 6-53 வரை.

மேடம்: பிறருக்கு உப காரம். குடும்ப சுகம், அதி காரிகள் உதவி

இடபம்: மனச்சுமை, அதி காரப்போட்டி. இனசன வெறுப்பு.

மிதுனம்: வாழ்க்கையில் வெறுப்பு, மனப்பயம், பண முடை.

கடகம்: தொழில் அக்கறை, குடும்ப மகிழ்ச்சி, இனசன வரவு.

சிங்கம்: சாமர்த்தியக் குறைவு, காரியதடை, அலைச் சல்.

கன்னி: வாழ்க்கைச் சுகம், பணவரவு, யோகமில் சிறப்பு.

துலாம்: மனமாற்றம், அவப்பெயர், வேலைப்பழு.

விருச்சிகம்: காரிய ஜயம், புதிய சிந்தனை, வாக்கு வன்மை.

தனுசு: பிரச்சினைக்குத் தீர்வு, கணவன் பரிசு, புதிதிரவி உதவி

மகரம்: குடும்பமுரண் பாடு அதிகார சர்ச்சை, குழப்பம்.

கும்பம்: விரயாதிக்கம், பயணற்ற செலவு, மனமுறிவு.

மீனம்: பெரியோர் ஆசி, குடும்பச் செலவு, அதிர்ஷ்ட வாய்ப்பு.

ஜோஸ்யர்

மழையின்மையால் நெற்பயிர் வாடுகிறது

(புலோலி)

போதிய மழையின்மையால் வடமராட்சிப் பகுதியில் நெற் பயிர்கள் கருகிவருகின்றன.

கடந்த வருடத்தில் நெல் விதைக்கப்பட கால்களில் பெய்த மழை யினையடுத்து பின்னர் போதிய மழை பெய்தவில்லை. இதனால் கதிர் வரக்கூடிய அளவுக்கு வளர்ந் துள்ள நெற்பயிர்கள் யாவும் கருகிவருவதைக் காணக் கூடி யதாக இருக்கிறது (61

தாமதம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் சிறுபனவுக் கூட்டுறவுச் சங்கம் விவசாய உபகரணங்களையும், நுகரிச் சிப்பொருட்களையும் சொழும் பிலிருந்து கப்பல் மூலம் இங்கு கொண்டு வருவதற்கு சமர்ப் பித்த விண்ணப்பத்தை கூட் டுப்படை தலைமை அலுவல கம் அனுமதி வழங்காது தாம தப்படுத்தி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. (72)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும்

அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், தேவன் – யாழ்ப்பாணம்

ஆகியோர் ஞாபகார்த்தக்

கவிதை, பேச்சுப் போட்டிகள்

1993



வித்துவான்
சி. ஆறுமுகம்

தேவன்
யாழ்ப்பாணம்

எமது கழகத்தால் நடாத்தப்படவுள்ள மேற்படி போட்டிகளுக்குரி தகுதியான வரிகள் வண்ணப்பக்கலாம். கவிதை, பேச்சு ஆகிய இருபோட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் போட்டியாளர்களுக்கு இவ்வாண்டு முற்பகுதியில் நடைபெற வுள்ள கம்பன் விழாவில் தங்கப் பதக்கங்களும் பரிசில்களாக வழங்கப்படும். அத தோடு அவர்கள் கௌரவிக்கப்பட்டு, கம்பன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.

★ உடன் தரப்படும் தலைப்பில் பேசவும் கவிதை ஆக்கவும் தகுதியுள்ள முப்பத் தைந்து (35) வயதுக்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

★ போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை ரூபா இருபதைந்து (25/-) செலுத்தி கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்:

யாழ்ப்பாணம்	—	பூபாலசிங்கம் புத்தகசாலை
சுன்னாகம்	—	தனலக்சுமி புத்தகசாலை
நெல்லியடி	—	சிவசக்தி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை வீதி
சாவகச்சேரி	—	சிவம் மெடிக்கல்ஸ், கச்சாய் வீதி

★ விண்ணப்பங்களை தபாலிலும் அனுப்பப்படல் வேண்டும். அனுப்பவேண்டிய முகவரி:

போட்டி இணைப்பாளர்,
அகில இலங்கை கம்பன் கழகம்
"கம்பன் கோட்டம்"
300, கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பமுடிவு திகதி: 1993 பெப்ரவரி 15

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

தி. திருநந்தகுமார் — தலைவர்
ஆறு. திருமுருகன் — போட்டி இணைப்பாளர்
க. குமாரதாசன் — செயலாளர்

(எ 2970)

அகில இலங்கைக் கம்பன் கழகம்

வழங்கும்

மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடாத்தும் கம்பன் விழாவில் இவ்வாண்டு முதல் தேர்ந்தெடுக் கப்படும் ஒருவருக்கு மேற்படி மகர யாழ் விருதினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இவ்விருதுக்குரி தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா பதினையாயிரம் (15,000/-) கொண்ட பண முடிப்பும், தங்கப் பதக்கமும் வெள்ளியிலான மகர யாழ் விருதும் முதன்மை கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சி யோடும், இனப்பற்றோடும் மனிதாபிமானத் தோடும், இம்மண்ணுக்காய்த் தொண்டாற்றி, எமது இனிய தலைமுறைக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ்விருதுக்காகத் தேர்ந்தெடுப்பதென எமது கழகம் முடிவுசெய்துள்ளது.

இத்தகைய சான்றோரின் பெயரி, விலாசங்களைப் பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்காண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் 1993-02-15 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

விருதுபற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர்குழுவினால் தீர்மானிக்கப்படும்

சிபார்சுகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் "மகர யாழ் விருதுக்கான சிபார்சு - 1993" எனக் குறிப்பிடவும்.

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

தி. திருநந்தகுமார் — தலைவர்
க. குமாரதாசன் — செயலாளர்

அகில இலங்கைக் கம்பன் கழகம்
"கம்பன் கோட்டம்"
300, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (எ-2789)

மாகாண முதல்வர்கள் பலர் தேர்தலில் போட்டியிட அனுமதியில்லை

(தொடர்ச்சி)

இம்முறை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. க சார்பில் தற்போதைய மாகாண முதல்வர்கள் பலர் போட்டியிடமாட்டார்களென ஐ தே க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு அதிகார தஷ்பிரயோகங்களில் ஏற்கனவே ஐ தே. க. முக்கியஸ்தர்கள் பலர் வீடு விடாக பிரசார வேலையில் ஈடுபட்டு வருகிறார்களாம்.

சென்ற முறை மாகாண சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரித்த சுதந்திரக்கட்சி இம்முறை களத்தில் இறங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

கஷ்டப்பிரதேச ஆசிரியர்க்கு பதவி உயர்வும், சலுகையும்

(உடுவில்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல புதிய பதவி உயர்வுகளும் சலுகைகளும் இந்த ஆண்டில் வழங்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட பாடசாலைகளை கஷ்டப் பிரதேச பாடசாலைகளாக ஏற்கெனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கே புதிய சலுகைகளும் வசதிகளும் அடுத்த ஆண்டில் வழங்கப்படவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. கே. தியாகராசா தெரிவித்துள்ளார். (109)

இந்திய-ஓமான் கடற்படைகள் இணைந்து கூட்டுப் பயிற்சி

(புதுடில்லி)

இந்தியாவும் – ஓமானும் நேற்றுமுதல் தங்கள் போர்க் கப்பல் பயிற்சியினை ஓமான் கடற்பகுதியில் கூட்டாக ஆரம்பித்துள்ளன.

இரண்டு நாள் நடைபெறும் இப்பயிற்சியில் இரு நாடுகளினதும் போர்க் கப்பல்களும், கடற்படை யுத்த விமானங்களும் பெருமளவு படைவீரர்களும் ஈடுபட்டுவினர்

இந்திய கடற்படை வெளிநாட்டு கடற்படையுடன் இணைந்து போர்ப் பயிற்சி மேற்கொள்வது இதுவே முதல் தடவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் தங்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் நோக்கிலேயே இப்பயிற்சியினை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

தனிச் சிங்களத்தில் விண்ணப்பப் படிவங்கள்

(மானிப்பாய்)

கொழும்பு கச்சேரியில் புகையிரத ஆணைச்சீட்டைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் படிவங்கள் தனிச் சிங்களத்தில் விநியோகிக்கப்படுவதால் சிங்கள மொழி தெரியாத பலர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

இவர்கள் இவ்விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கு பலரின் உதவியை நாடி அலைகின்றனர். தமிழுக்கும் அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுவிட்டது என்று அரசு கூறுவது பேச்சுப் பலக்கு தம்பி காசு நடை என்ற அளவுக்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்ற சம்பந்தப்பட்டவர்கள் கூறுகின்றனர். (71)

பாக். தூதரக ஊழியர்களை குறைக்க மாறு இந்தியா உத்தரவு!

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள பாகிஸ்தானிய தூதரக ஊழியர்களை குறைக்குமாறு இந்திய அரசு பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்குமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டதற்கு பதிலடியாகவே இந்தியாவும் இவ்வாறானதொரு உத்தரவை விடுத்துள்ளது.

உளவு வேலை, சட்ட விரோத நடவடிக்கைகள் என்ற காரணம் காட்டியே தூதரக ஊழியர்களை குறைக்குமாறு இந்தியா கேட்டுள்ளதாம்

இந்தியாவின் இந்த உத்தரவை ஏற்றுள்ள பாகிஸ்தான் தனது ஊழியர்களின் எண்ணிக்கையை இணக்கி

கலாசாலைகள் காலவரை மேற்பார்வையாளர்கள் சிரமம்

(வட்டுக்கோட்டை)

இலகுகைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பரிசில் பரீட்சை க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் (4-ம் பக்கம் பார்க்க)

யாழ். நிலைமை குறித்து அறிக்கை தயாரிப்பு

(நல்லூர்)

யாழ். மாவட்ட மக்களின் சகல நிலவரங்களும் குறித்த பூரணமான அறிக்கை ஒன்றை தயாரிக்க யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இவ் அறிக்கையைத் தயாரிப்பதற்கு வைத்திய அதிகாரிகள், செயலக உயரதிகாரிகள், பேராசிரியர்கள், நிறுவன இணைப்பாளர்களை கொண்ட விசேட குழு ஒன்றும் அமைக்கப்படடுள்ளது.

இக்குழுவினரால் யாழ். மாவட்ட மக்களின் பேஷாக்கு நிலவரம் வாழ்க்கைப் பிரசினைகள் உளப்பாதிப்புக்கள் போன்றன விஞ்ஞான ரீதியாக ஆராயப்படுமெனவும் தயாரிக்கப்படும் அறிக்கையின் பிரதிகள் உலகநாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரியவருகிறது. (158)

★ தொழிற் பயிற்சிகள் ★

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்புப் பெறக்கூடியமுறையில குறைந்த காலத்தில் பயிற்சிகள் பெற:

ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ றேடியோ, T. V. வீடியோ டெக் றிப்பியறிங்:
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் தொழிற்பாடு திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதம்

★ றீவைண்டிங்:
மின் மோட்டார், மின் விசிறி, ராஜஸ்போம் மற்றும் மின்சாரப் பொருள்கள் றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
4 மாதம்

★ எலக்றிக் வயறிங்:
வீட்டு மின்சார வேலைகள், மின்சாரப் பொருள்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
2 மாதம்

★ மோட்டார் பைசிக்கிள் மெக்கானிசம்:
மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். 4 மாதம்

★ AIRCONDITIONS AND REFREGERATION
சகல குளிரூட்டிகளும் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்றப்படும்.
காலம் 4 மாதம்

★ SPOKEN ENGLISH:

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

15-01-93 கிழமை நாட்கள் 9-00 A. M.

O/L, A/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

JAFFNA TECHNICAL INSTITUTE

றெயில்வே கடவை அருகாமை (மேல் மாடி)

ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்.

(ஏ-2782)

உலகின் மிகப் பெரிய

நூலக கப்பல் கொழும்பு வருகிறது

(தொழும்பு)

உலகின் மிகப்பெரிய நூலக காண்காட்சி கப்பல் கொழும்புத்துறைமுகம் வரவுள்ளது.

எம். வி. டவுலதி எனப்படும் இக்கப்பல் ஏற்கனவே 1988-ம் ஆண்டு இலங்கை வந்திருந்தது. 'எலிசபெத் மகாராணி' இறங்குதுறையில் நங்கூரமிடும் இந்த நூலக கப்பல் அடுத்த மாதம் 5-ந் திகதி முதல் 22-ந் திகதி வரை பொதுமக்கள் பார்வையிடலாம்.

இக்கப்பல் பல வகையிலும் சிறப்பு வரய்ந்தது. இக்கப் பல் 1914-ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. கடந்த ஆண்டு தொடக்கம் உலகின் மிகப்பெரிய மிகப்பழமை வாய்ந்த இன்னமும் சேவையில் ஈடுபடும் கப்பலென 'கின்னஸ்' புத்தகத்தில் இதன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. மிதக்கும் 'ஐக்கிய நாடுகவி' என அழைக்கப்படும் இக்கப்பல் சர்வதேச புரிந்துணர்வுடன் நல்லெண்ணத்தையும் கொண்டுவருகிறது. இக்கப்பலில் 30 நாடுகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். (கி)

விதவைப் பெண்களுக்கு தையல் பயிற்சி

(மானிப்பாய்)

வன்செயல்களினால் உழைப்பாளிகளை இழந்து தொழில் வாய்ப்பில்லாமல் இருக்கும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள வறிய யுவதிகளுக்கு தையல் பயிற்சிமூலம் தொழில் வாய்ப்பளிக்க யுனிசெப் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்நிறுவனம் மேற்படி மூன்று மாவட்டங்களிலும் முன்னை பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு தையல் பயிற்சி நிலையம் என்ற அடிப்படையில் இந்த நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திற்கும் 20 யுவதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறு மாதகாலம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு ஊதியமும் வழங்கப்படும்.

பயிற்சியை முடித்துக் கொண்ட ஒருவரி தையல் வேலையை ஆரம்பிப்பதற்கு வங்கிகளி மூலம் கடன் பெற்றுத் தையல் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (71)

மலேரியா பரவுகிறது

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் நுளம்புகளினால் மலேரியாக் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் அதிவேகமாக பரவி வருகின்றன.

பொதுமக்கள் தமது இந்நோயிலிருந்து பாதுகாக்க தொடர்ந்து வைத்த தண்ணீரை (4-ம் பக்கம் பார்க்க)

யாழ். மக்களின் இன்னல் குறித்து அங்கிலிக்கன் ஆயருக்கு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து யாழ் மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கிலிக்கன் ஆயர் வண சென்னத்தி பெரினண்டோவிடம் விளக்கிக் கூறியதுடன் யாழ் நிலை தொடர்பான அறிக்கைகளையும் ஆயரிடம் சமர்ப்பித்தனர்.

நேற்றுக்காலை டாக்டர் சிங்கராசா தலைமையில் யாழ். மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆயர் வென்னத்தி பெரினண்டோவைச் சந்தித்திருந்தார்கள். இச்சந்திப்பின் போதே மேற்படி அறிக்கை கையளிக்கப்பட்டது.

மேலும் மூன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேணிப் பகுதியில் புதைக்கப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொது மக்கள் கிளாலிக் கரையை நோக்கி வரும்போது சில சடலங்கள் கடலில் மிதந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் பயணிகள் டலர் தெரிவித்தனர். (வி)

கிளாலி சம்பவத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதி ஒழுங்கையில் வசித்து வந்த ஜேரோம் அருமைநாயகமும் அவரின் மனைவியும், எட்டு வயது மகள் ஒருவரும் மேற்படி சம்பவத்தில் பலியாகியுள்ளனர்.

1990-ம் ஆண்டு யாழ். ரயில் நிலையத்தின் மீது 'சகடை' விமானம் மேற்கொண்ட குண்டு வீச்சில் மேற்படி குடும்பத்தின் 11 வயது நிரம்பிய சிரேஷ்ட மகள் பலியானது குறிப்பிடத்தக்கது.

இக்குடும்பத்தில் தற்போது 11 வயது நிரம்பிய மகள் ஒருவரே உறவினர் வீட்டில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

மலேரியா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அருந்தியும், மற்றும் சுகாதார விதிமுறைகளை அனுசரிக்கும்படியும் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நோய் கடுமையாகப் பரவிவருவதால் இந்நோயை தடுக்க மக்கள் சுகாதாரக் கந்தோர்களுக்குச் சென்று ஆவன செய்யுமாறு அவர் தெரிவித்துள்ளார். (154-56)

காசோலைகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமைபுரிந்த மேற்பார்வை வாளர்கள் நோக்குநர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான காசோலைகளில் பதியப்பட்ட திகதிகள் காலாவதியானதால் திருப்பி அனுப்பவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறுபது நாட்களுக்குச் செல்லுபடியாகக் கூடியதாக திகதியிடப்பட்டிருந்தும் அவைகள் காலதாமதமாக வந்து சேர்ந்தமையாலேயே திருப்பி அனுப்பவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாம். (139)

சுகாதார, மருத்துவம், போஷாக்கு நிலைமை பற்றிய அறிக்கையை டாக்டர் சிங்கராசாவும், யாழ். மாவட்டத்தில் உணவு நிலைமை பற்றிய அறிக்கையை அதிகாரி புனர்வாழ்வு நிலையத்தின் சார்பில் திரு.முத்தையாவும் கல்வி நிலைமை தொடர்பான அறிக்கையை பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் விவசாய நிலைதொடர்பான அறிக்கையை கௌரி கிருஷ்ணபிள்ளையும், தொழில் நிலைமை தொடர்பான அறிக்கையை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் திரு. யோகநாதனும் யாழ். குடாநாட்டுக்கு வரத்து தொடர்பான அறிக்கையை அதிகாரி புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் நீலதம்பியும் ஆயரிடம் சமர்ப்பித்தனர்.

"யாழ்.மாவட்ட மக்களின் போஷாக்கு நிலை 1992" என்ற கைநூலையும் அங்கிலிக்கன் ஆயர் வெளியிட்டுவைத்தார். (வி)

க. பொ. த.(உ/த) பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1992 ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையின் முடிவுகள் அடுத்த வாரம் வெளிவரவுள்ளது.

மேற்படி பரீட்சை முடிவுகள் அனைத்தும் தற்போது கொழும்பில் உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் ஹமாரிக்கப்பலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இக்கப்பல் எதிர் வரும் 17-ம் அல்லது 18-ம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேருமெனத் தெரியவருகிறது (வி-159)

யுத்த நிறுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சென்று வருவதற்கு வழி செய்யவேண்டும்.

தமிழ் மக்கள் மீது அரசு விதித்த 48 அத்தியாவசியப் பொருட்களின் தடைகளை உடனடியாக நீக்கவேண்டும்.

அரசு யுத்த நிறுத்தத்தை உடனடியாக அமுல் படுத்தி, பின்பு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்.

மேற்கூறப்பட்ட இந்த மூன்று அம்சங்களும் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். ஆயுத பலத்தினால் இன்றைய பிரச்னையை தீர்த்துவிடமுடியுமென்று சில அரசியல்வாதிகள் நம்பியிருப்பது மிகவும் மடமைத்தனம்.

உங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள எரிபொருள், பொருளாதாரத் தடையால் நீங்கள் கடந்த பல வருடங்களாக எவ்வளவு துன்பங்களை அனுபவித்து வருகிறீர்கள் என்பதை இந்த சில நாட்களில் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் இருட்டில் நீங்கள் இருந்து பழகிவிட்டீர்கள். ஆனால் என்னால் அப்படி இருப்பது பெரும் சிரமமாக இருக்கிறது.

நான் கொழும்பு சென்றதும் இந்த நாட்டில் விரைவில் சமாதானம் ஏற்படுவதற்கு தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பலமான பாலமாக இருப்பேனென்று கூறினார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் பேசுகையில், "இலங்கையிலேயே சிறந்த மாநகரசபைகளில் ஒன்றாக விளங்கிய யாழ் மாநகரசபைக்கு தற்போது அரசு விடிப்படை வசதிகளை செய்வதற்கு பின்நிற்கின்றது. இந்தப் புறக்கணிப்பு 1981ம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதுமே ஆரம்பமாகி விட்டது.

கடந்த இரண்டரை வருடமாக யாழ். மக்களுக்கு மின்சாரம் இல்லை, குழாய் குடிநீர் இல்லை, சுகாதாரவசதிகளும், மருந்து வகைகளும் இல்லை. இதனால் தாய், சிசுக்களின் இறப்புவீதம் அதிகரித்து வருகின்றது. தபால்சேவை சீர்குலைந்துள்ளதால் யாழ். நகர மக்கள் வெளியுலகத்துடனான தொடர்புகளை இன்றி வாழ்கின்றார்கள்.

ஆகவே எங்களின் இந்த அவலநிலையை அரசுக்கு எடுத்துக்கூறி ஆவன செய்வீர்கள் என்று நாம் முழுமையாக நம்புகின்றோம் என்று கூறினார்.

இவ்வைபவத்தில் கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் வண.பிரான்ஸிஸ் ஜோசப், யாழ் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் செல்வேந்திரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா ஆகியோரும் உரையாற்றினர்கள். (வி-158-157)

ரயில்வே கடவை ஊழியர்க்கு சம்பளம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ரயில்வே கடவைப் பாதுகாப்பு ஊழியர்களுக்கு 1993ம் ஆண்டிலிருந்து சம்பளம் வழங்குவதற்கு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஊழியர்களுக்குக் கடந்த 1992ம் ஆண்டிலிருந்து சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை.

சற்போது அரசு, வடபகுதி ரயில்வேக் கடவைப் பாதுகாப்பு ஊழியர்களுக்கு 1993ம் ஆண்டிலிருந்து சம்பளம் வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்திருப்பதோடும், 1992ம் ஆண்டுக்கான சம்பளம் பற்றி எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (வி-158)

புலிகளுடன்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் சுவார் 2மணி நேரமாக பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பதாக அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஆங்கிலப்பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டுள்

தபால்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் சேர்ப்பிக்கும் மாறு வடக்கு - கிழக்கு மாகாண தபால் திணைக்களச் செயலாளரி கேட்டுள்ளார்

இன்னும் ஓரிரு தினங்களில் குமணகப்பல் இலங்கையிலிருந்து புறப்படவுள்ளது. குமணகப்பலில் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

ஏற்கனவே அனுப்பப்பட்ட தபால் பொதிகள் குமணகப்பலிலேயே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (159)

மண்ணெண்ணை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களாகக் காத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி லொறிகளில் மண்ணெண்ணை, தேங்காயெண்ணை, அரிசி, தேங்காய், சர்க்கரை போன்ற பொருள்கள் பெருமளவில் இருக்கின்றனவாம்.

இந்த லொறிகளில் உள்ள பொருள்கள், குறைமாதத்தைப்பொதிகள் தினத்துக்கு முன்பாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகின்றது.

கிளிநொச்சிப் பகுதியில் மண்ணெண்ணை லீற்றர் 90-00 ரூபாவாகவும், தேங்காயெண்ணை லீற்றர் 50-00 ரூபாவாகவும், சர்க்கரை கிலோ 50-00 ரூபாவாகவும், அரிசி 20-00ரூபாவாகவும், தேங்காய் 8-00 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 3,000க்கு மேற்பட்ட பயணிகள் யாழ்ப்பாணம் வருவதற்காக கிளிநொச்சி, நல்லூர், ஆலங்கேணிப்பகுதிகளில் காத்திருப்பதாகத் தெரியவருகிறது.(வி)

சுப்பசோனிக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரான நிலையிலிருந்த நெற்பயிர்கள் நாசமாகியுள்ளன. பயன்தரு மரங்கள் பல முறிந்து விழுந்துள்ளன. இரண்டு பாரிய குண்டுகள் இலயார் தூரங்களுக்கு தூக்கி வீசப்பட்டுள்ளன.

விமானங்களின் பேரிரைச்சலைத் தொடர்ந்து மட்டுவில் பகுதியெங்கும் குய்யோ முறையோ எனக் கதியலறி ஒவ்வொருவரும் தாம் செய்து கொண்டிருந்த வேலைகளைக் கைவிட்டுப் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி தஞ்சமடைந்தவண்ணமிருந்தனர்.

பலர் தமது இஷ்ட தெய்வங்களை வேண்டியவாறு வெளியான இடங்களில் குப்புறப் படுத்தனர்.

இக்குண்டு வீச்சின் எதிரொலியாக திருமதி இந்திரகுமார் மகாதேவி (46 வயது, மட்டுவில் தெற்கு) என்பவரி பதுங்கு குழிக்குச் செல்லும் போது அதிர்ச்சிக்குள்ளாகி ஸ்தலத்திலே பலியானார். திருமதி இந்திரா தர்மலிங்கம் (40-வயது, மட்டுவில் வடக்கு) என்பவரி அதிர்ச்சியடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பகுதியிலுள்ள இராசையா சிவசாமி என்பவருடைய வீடு உட்பட ஆறு வீடுகள் சேதமடைந்துள்ளன.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் நேரம் இவ் விமானங்கள் பேரிரைச்சலுடன் வான் பரப்பில் வட்டமிட்டுக் கொண்டிருந்தமையினால் பாடசாலைகளுக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் வீதியிலும் மற்றும் வயல்வெளிகளிலும் படுத்துப் பாதுகாப்புத் தேடினார்கள். இதனால் பல மாணவர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் பாடசாலைக்குச் செல்லவில்லை.

பொங்கல் தினத்தை ஒட்டி சாவகச்சேரி மதியச் சந்தையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் விமானங்களின் பேரிரைச்சலைக் கேட்டதும் அல்லோலகல்லோலப்பட்டனர். விமானங்களின் பேரிரைச்சலைத் தொடர்ந்து சந்தையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த அபாயமணி தொடர்ச்சியாக ஒலித்தவாறு இருந்தது.

தென்மராட்சிப் பகுதியில் சுப்பசோனிக் விமானங்களினால் நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் இக்குண்டு வீச்சுக்குள்ளான பாடசாலைகளில் மாணவர்களுடைய வரவு குறைந்து காணப்பட்டது.

இக்குண்டு வீச்சு நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன் தென்மராட்சிப் பகுதியில் சீ-பிளேன் என்று கூறப்படும் வேவு விமானம் பல தடவைகள் நோட்டமிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது. (155-159)

இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சர் எட்வர்டோ பெலரோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் அழைப்பின் பேரிலேயே இந்திய ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

யாழ் மக்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் டாக்டர் பூக்ரஸ் பூ ரஸ் காலிக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஊடாக இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேரடிக் கொலைகள் மூலமாகவும், மறைமுகமான பட்டினிச் சாவின் மூலமாகவும் யாழ். மக்கள் இனப் படுகொலைக்கு இலக்காகின்றனர். இதனை மனிதசமுதாயம் வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது மனிதத் தன்மையற்ற ஒரு செயலாகும். (இ)

மரண அறிவித்தல்

இராசையா பொன்னம்மா

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த பொன்னம்மா காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற இராசையாவின் அன்புமனைவியும், நாகேஸ்வரி, சந்திரானம் ஆகியோரின் தாயாரும் திருநாவுக்கரசு (C. T B) காதிதிலகை ஆகியோரின் மாமியாரும் விஜயகிரி விஜயசுகந்தன், சுகந்தி, சுடரொளி, கமல் விழி ஆகியோரின் அன்புப் பேத்தியும் அனுஜனின் அன்புப் பீட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13 - 01 - 93 இன்று) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்வதும்.

தகவல்: மருமக்கள்

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (கி-7139)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B